செ.வெ.எண்: 438 நாள்: 28.05.2010

தமிழ் இணைய மாநாட்டுக் குழு

# பத்திரிக்கைச் செய்தி

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுடன் இணைந்து தமிழ் இணைய மாநாடு வரும் சூன் திங்கள் 23-27, 2010 வரை கோவையில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி ``தமிழ்க் கணினி கண்காட்சி" கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்க் கணினி கண்காட்சிக்காக 2 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டு, கண்காட்சிக் கூடமும், அரங்குகளும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கண்காட்சிக்கூடம் முழுவதும் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டும், இணையத்தள வசதியுடன் அமைக்கப்படும் 123 அரங்குளிலும் மத்திய, மாநில அரசுகளின் துறைசார்ந்த இணையத்தளங்கள், தமிழ்ச் செய்தி மற்றும் பருவஇதழ்கள் இணையத்தளங்கள், தமிழ் மென்பொருள்கள், தமிழ்க் கணினிகள், தமிழ் மின்கருவிகள், தமிழ் பல்லூடக மென்பொருள்கள், தமிழ் விக்கிப்பீடியா மற்றும் வலைப்பூக்கள் பயிற்சி அரங்குகள், முக்கிய கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளனர்.

மாநில அரசின் பல்வேறு முக்கிய துறைகளின் செயல்பாடுகள், 'இ-கவர்னன்ஸ்' என்ற மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் இணையத்தளங்கள் வாயிலாக மக்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றிய செயல் விளக்க அரங்குகள் அமைக்கப்பட் உள்ளன.

மத்திய அரசின் சார்பில் பங்கேற்கும் துறைகள்: சி-டேக், இந்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம்.

பன்னாட்டு நிறுவனங்கள்: மைக்ரோசா:ப்ட், கூகுள், யாகூ நிறுவனங்களின் தமிழ் மென்பொருள் பயன்பாடுகள் நேரடி செயல் விளக்கம்.

இந்திய பன்னாட்டு நிறுவனங்கள்: ஹெச்.சி.எல்., டி.சி.எஸ்., விப்ரோ போன்ற நிறுவனங்களின் நவீன மென்பொருள் தொழில்நுட்பச் செயல் விளக்க அரங்குகள்.

தமிழ் மென்பொருள் நிறுவனங்கள்: இந்திய மற்றும் தமிழகத்தின் முன்னணி தமிழ் மென்பொருள் நிறுவனங்கள் அனைத்தும் பங்கேற்கின்றனர். யூனிக்கோட் தமிழ் எழுத்துருக்கள், அச்சுத்துறையில் வளர்ந்துள்ள நவீன மென்பொருள்களில் தமிழ் எழுத்துக்களின் பயன்பாடுகள், விஷுவல் மீடியா துறையில் பயன்படுத்தப்படும் தமிழ் மென்பொருள்கள், ஓ.சி.ஆர் தமிழ் எழுத்துரு மாற்றிகள், கணினித் தமிழ் எழுத்துக்களை ஒலியாக மாற்றும் நவீன மென்பொருள்கள், நூலகங்களில் பார்வையற்றோர் தமிழ் புத்தகங்கள் படிக்க உதவும் அதிநவீன மென்பொருள் தொழில்நுட்பம் இவைகளை பார்வையாளர்களுக்கு விளக்கும் செயல் அரங்குகள்.

யூனிகோட் தமிழ் பயிற்சி அரங்கம்: தமிழ் யூனிகோட் பற்றிய விழிப்புணர்வு, தமிழ்நெட்99 வசைப்பலகை அறிமுகம், தமிழ் வலைப்பூக்கள் மற்றும் தமிழ் விக்கிப்பீடியா பற்றிய விளக்கஉரை, தமிழின் இலக்கியம், நூல்கள் சார்ந்த வலைத்தளங்கள் ஆகியவற்றை பார்வையாளர்கள் புரிந்தும், பயிற்சி செய்து பார்க்கும் விதத்தில் அமைக்கப்படும் 'தமிழ்க் கணினி பயிற்சி அரங்கம்'.

கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் தமிழ்க்கணினி முயற்சிகள்: அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம். ஐ.ஐ.டி. சென்னை, ஐ.ஐ.எஸ்.சி. பங்களூரு, சிங்கப்பூர் கல்வி அமைச்சகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களின் தமிழ்க்கணினி மற்றும் மென்பொருள் ஆராய்ச்சிகளின் விளக்க அரங்குகள்.

இலவச தமிழ் மென்பொருள் சி.டிக்கள்: மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை சார்பில் கண்காட்சிக்கு வரும் பார்வையாளர்களுக்கு யூனிக்கோட் தமிழ் மென்பொருள்கள் அடங்கிய சுமார் ஒரு லட்சம் சி.டிக்கள் இலவசமாக விநியோகம் செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதுபோல் கண்காட்சியில் பங்கேற்கும் பல நிறுவனங்களும் தங்கள் தமிழ் மென்பொருள்களின் இலவச சி.டி. பதிப்புக்களையும் பார்வையாளர்களுக்கு வழங்க உள்ளன.

மேலும், தமிழ்க் கணினி வரலாற்றில் முதன்முறையாக தமிழில் முன்னணியில் உள்ள செய்தி மற்றும் ஊடக இணையத்தளங்கள், இ-பேப்பர் முறைகள், யூனிகோட் தமிழில் சிறப்பாக செயல்படும் இணையத்தளங்கள் ஆகியவைகளின் அரங்குகளும் அமைக்கப்பட உள்ளது.
தமிழகத்தின் முன்னணி செய்தி மற்றும் தகவல் தமிழ் இணையத்தளங்கள் தங்களின் இணையத்தள சிறப்புகளை விரிவாக லட்சக்கணக்கான மக்களிடமும், பள்ளி மாணவர்களிடம், மாநாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு அறிஞர்களிடமும், பார்வையாளர்களிடமும் விளக்கிக் கூற சரியான சந்தர்ப்பமாக இந்த 'தமிழ்க்கணினி கண்காட்சி' அமையும்.

சூன் 23ம் தேதி முதல் சூன் 27ம் தேதி வரை 5 நாட்கள் கண்காட்சி நடைபெறும்..

பல லட்சம் பார்வையாளர்களுக்கு, நவீன கணினித் தொழில்நுட்பத்தில் தமிழின் ஆளுமையையும், பயன்பாட்டையும் விளக்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தி கணினித்துறையில் தமிழின் வளர்ச்சியை மேலோங்கச் செய்வதே கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

மேலும் விபரங்களுக்கு:

தமிழ்க் கணினிக் கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்: திரு.சொ.ஆனந்தன், செல்: **94440-75051**

மின்னஞ்சல் முகவரி : **ti2010expo@gmail.com**



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.